**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06–ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**IA.06/2025 in O.S.90/2015**

பாண்டியன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராயர்,
2. வேல்முருகன்,
3. செந்தில்குமார்,
4. கணேசன்,
5. பாக்கியராஜ்,
6. ஜெய்சங்கர்,
7. திவாகர், ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 19.11.2025 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருP.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுவில் கண்ட நபர்களுக்கு நீதிமன்றம் மூலம் முறையே சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய உத்தரவாக வேண்டுமென்று சி.பி.சி.ஆர்டர் 16 ரூல் 1 படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

**2.** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரரின் பெயரில் வழக்கு தொடர்ந்து அதில் மனுதாரர் தரப்பு விசாரணை செய்து குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்ட நிலையில்

மனுதாரர் தரப்பு இதர சாட்சிகளுக்காக வேண்டி 06.07.2024 ல் வாய்தா போது இம்மனுவில் சாட்சிகளாக குறிப்பிடபட்டுள்ள நபர்களையே சாட்சியாக விசாரிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்து அந்த மனுவும் I.A.3/24 என நம்பராகி மேற்படி மனுவில் சாட்சிகளை எந்த காரணத்திற்காக விசாரிக்க வேண்டும் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என மனுவானது கடந்த 23.08.2024 அன்று தள்ளுபடியாகிவிட்டது என்றும், இந்நிலையில் மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வேண்டி வாய்தா உள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் தனது எதிர்வழக்குரையில் தாவா சொத்தினை மனுதாரர் அனுபவிக்கவில்லை என கூறியுள்ளதை பொருத்து, தாவா சொத்தில் மனுதாரர் அனுபவத்தை பொருத்து நிரூபிக்க வேண்டி, மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்ட நபர்களை விசாரிக்க வேண்டியது அவசியமாகிறது என்றும், மனுவினை அனுமதித்தால் தான் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை விசாரித்து மனுதாரர் தரப்பு கட்சியினை மனுதாரரால் நிரூபிக்க இயலும் என்றும், ஆகையால் மனுவில் கண்ட நபர்களுக்கு நீதிமன்றம் மூலம் முறையே சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய உத்தரவாக வேண்டுமென்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதை மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

**3.** மனுதாரரின் மனு அனுமதிக்க உகந்ததல்ல என்றும், வழக்கில் இதே பரிகாரம் கோரி ஏற்கனவே மனுதாரர் மனு தாக்கல் செய்து அதுவும் I.A.3/2024 என நம்பராகி அதுவும் உரிய விசாரணைக்குப்பின் சென்ற 23.08.2024 தேதியில் மெரிட்டில் தள்ளுபடியாகி உள்ளது என்றும், அதன் பேரில் எவ்வித மேல்முறையீடும் இல்லை என்றும், திரும்பவும் முன் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கும் இம்மனு சட்டப்படி அனுமதிக்க உகந்ததல்ல என்றும், இது ஒரு 10 வருடமாக நிலுவையில் உள்ள வழக்கு என்றும், இவ்வழக்கின் தன்மைக்கும்

சூழ்நிலைக்கும் மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்கள் எவ்விதத்திலும் அவசியமான நபர்களல்ல என்றும், மனுமூலம் வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்க விழையும் நால்வரும், மனுதாரருக்கு வேணடியவர்கள் என்றும், அவர்கள் எந்த அடிப்படையில் மனுதாரர் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க விழைவதாக மனு அபிடவிட்டில் கூறப்படவுமில்லை என்றும், தவிரவும் வழக்கில் ஏற்கனவே சாட்சியங்கள் ஏதேனுமிருப்பின் அதன் விவரத்தை கூற உத்தரவு ஏற்பட்டும், மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் பட்டியல் ஏதேனும் கொடுக்கப்படவில்லை என்றும், ஆகவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. மனு, எதிருரை இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் இம்மனுவில் கண்டுள்ள சாட்சிகளை அழைக்க ஏற்கனவே இ.ம.எண்.03/2024 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவில் எந்த காரணத்திற்காக சாட்சிகளை அழைக்கின்றனர் என்பது குறிப்பிடப்படவில்லை என்பதற்காக மேற்படி மனுவானது தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பிலும் அந்த காரணத்தையே வாதமாக முன் வைக்கப்பட்டுள்ளது.

8. மேலும் அசல் வழக்கில் மனுதாரரின் அனுபவத்தை நிரூபிக்க வேண்டி இம்மனுவின் சாட்சிகளை அழைக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை கருத்தில் கொண்டும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதன்படி பார்க்கும்பொழுதும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:**

– இல்லை –

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.